திறமையான பயனீட்டாளராகச் செயல்படுங்கள்!

நிலச் சொத்து விற்பனையாளரை அமர்த்துவதன் பயனை அதிகப்படுத்துங்கள்

சொத்து பரிவர்த்தனையைப் பயனீட்டாளர்கள் சொந்தமாகக் கையாளலாம், அல்லது பதிவு செய்யப்பட்ட விற்பனையாளரின் சேவையைப் பயன்படுத்தலாம். சொத்து முகவைகள் மன்றம் (CEA) விற்பனையாளர்களின் தொழில்முறை நடத்தையை மேம்படுத்துவதற்குப் பற்பல விதிமுறைகளை அமலாக்கியது. உங்கள் விற்பனையாளருடன் தங்குதடையற்ற பரிவர்த்தனையை நிறைவேற்றிட, சில குறிப்புகள்.

வகுக்கப்பட்ட சொத்து முகவை உடன்பாடுகளைப் பயன்படுத்துங்கள்

சொத்து முகவை உடன்பாடு என்பது என்ன?

- இரு தரப்புகளின் நலனையும் பாதுகாக்க உங்களுக்கும் சொத்து முகவருக்கும் இடையில் செய்யப்படும் ஒப்பந்தம் இது
- சிங்கப்பூரிலுள்ள குடியிருப்புச் சொத்துகளின் விற்பனை, கொள்முதல், குத்தகை ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம்
- CEA மன்றத்தின் www.cea.gov.sg இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்

உங்களது விற்பனையாளர்:

- உங்களிடம் கலந்து பேசியதன் அடிப்படையில் உடன்பாட்டைத் தயாரிக்கவேண்டும்
- உடன்பாட்டைப் உங்களிடம் விளக்கிச் சொல்லவேண்டும்
- கையொப்பமிடுவதற்கு முன்பாக உடன்பாட்டைப் படித்துப் பார்ப்பதற்கு போதிய நேரம் தரவேண்டும்
- கையொப்பமிட்ட உடன்பாட்டின் பிரதியை உங்களிடம் தரவேண்டும்

பிரத்யேக உடன்பாடு



- ஒரு விற்பனையாளரை மூன்று மாதங்கள் வரையிலான காலகட்டத்திற்கு நியமித்து, பரிவர்த்தனை நிறைவடைந்ததும் தரகுக் கட்டணம் கொடுக்கவேண்டும்
- பிரத்யேக அடிப்படையில் அமர்த்தப்படும்போது, உங்கள் விற்பனையாளர் உங்கள் சொத்துக்காக வளங்களையும் நேரத்தையும் ஒதுக்கமுடியும்
- உடன்பாடு நடப்பிலுள்ள காலகட்டத்தில் நீங்களோ அல்லது வேறொரு விற்பனையாளரே சொத்தைப் பரிவர்த்தனை செய்தால், நியமிக்கப்பட்ட விற்பனையாளருக்கு நீங்கள் தரகுக் கட்டணம் தந்தாகவேண்டும்

பிரத்யேகமற்ற உடன்பாடு



- சொத்தை வாங்க, விற்க அல்லது வாடகைக்கு விட சில விற்பனையாளர்களை நியமிக்கலாம்
- விற்பனையாளர்கள் ஒரே சமயத்தில் முயற்சி மேற்கொள்ளாதிருக்க முன்கூட்டியே அவர்களிடம் விவரம் தெரிவித்திடுங்கள்
- உங்கள் பரிவர்த்தனையை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவிய விற்பனையாளருக்கு நீங்கள் தரகுக் கட்டணம் கொடுக்கவேண்டும்
- மற்ற தரப்பினரை உங்களிடம் அறிமுகப்படுத்த ஒன்றுக்கும் மேற்பட்ட விற்பனையாளர் முயற்சி செய்திருந்தால், யாருக்குத் தரகுக் கட்டணம் கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்

எத்தகைய உடன்பாடு செய்வது என்பது உங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் பொறுத்திருக்கும்.

* சொத்து முகவர்கள் சட்டம் 2010ன்கீழ், “சொத்து முகவர்கள்” என்பது சொத்து முகவை தொழில்களையும் (தனி உரிமையாளர், பங்காளித்துவம் மற்றும் நிறுவனங்கள்), “விற்பனையாளர்கள்” என்பது சொத்து முகவைப் பணியைச் செய்யும் தனிமனிதர்களையும் குறிக்கிறது.

CEA Council for Estate Agencies

மேல் விவரங்களுக்கு
இணையத்தளம் www.cea.gov.sg
அழைக்க கட்டணமில்லாத் தொலைபேசி: 1800 643 2555
மின்னஞ்சல் feedback@cea.gov.sg

பயனீட்டாளர் வளங்களுக்கு
பார்க்கவும் www.cea.gov.sg/consumerresources
பதிவிறக்கம் Apple App Store அல்லது Google Play-ல் “CEA@SG” மொபைல் செயலியிலிருந்து